# சௌந்தர்ய மடல்

பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்தினை
பிரதிபலிக்கும் காலாண்டு வெளியீடு [ஆகஸ்ட் 2012]

## தாகூர் நினைவு தினம்

தாகூர் தின விழா ஆண்டுதோறும் ஆகஸ்ட் 7–ஆம் நாள் காந்திகிராம அறக்கட்டளையில் கொண்டாடப்படுவது வழக்கம். இவ்வாண்டும் இத்தினம் 07–08–2012 அன்று கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கோயமுத்தூர் வனத்துறையில் முதன்மை வனப்பாதுகாவலர் முனைவர் மனோஜ் குமார் சர்க்கார் IFS அவர்கள் மற்றும் திருச்சி வனத்துறை முதன்மை வனப்பாதுகாவலர் முனைவர் அருணா பாசு சர்க்கார் IFS ஆகிய இருவரும் கலந்துகொண்டனர். இவர்கள் காந்திகிராம அறக்கட்டளையில் பல்வேறு அலகுகளில் பணிபுரியும் பணியாளர்களிடம் மூலிகை மற்றும் மருத்துவத் தாவரங்கள் பற்றி கலந்துரையாடினர். மேலும், மூலிகைச் செடிகள் பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், பயிர் செய்தல், பக்குவப்படுத்துதல் போன்ற பணிகளுக்கு அரசு அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என்றும் அதற்கான தரமான திட்டங்களைத் தயார் செய்து அனுப்புமாறும் கூறினர். மேலும், வனப்பகுதியில் சேகரிக்கப்படும் பொருட்கள், அதற்கு அரசு அளித்துள்ள அனுமதி பற்றியும் எடுத்துரைத்தனர். அதுமட்டுமல்லாது வனத்துறையினர் வனக் குழுக்கள் அமைத்து அவர்களுக்கு தேவையான நிதியுதவி அளித்து வாழ்வாதாரத்திற்கு உதவிபுரிகின்றனர் என்று கூறினர்.

இதனைத் தொடர்ந்து 3.00 மணி அளவில் டாக்டர் சௌந்தரம் மணிமண்டபத்தில் தாகூர்தினக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முனைவர் மனோஜ்குமார் சர்க்கார் அவர்கள் மாணவர்கள் பெரியவர்களிடமிருந்து ஆசீர்வாதம் வாங்குவதுபோல் மரங்களிடமிருந்தும் ஆசீர்வாதம் பெறவேண்டும்; காந்திகிராமத்தின் சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சாரம் குழந்தைகளை மென்மேலும் வாழ்க்கையில் முன்னேறச் செய்யும். குழந்தைகள் தங்களது திறமைகளை வெளிக் கொணர்ந்து நாட்டிற்கு நன்மை செய்யவேண்டும் என்றார். முனைவர் அருணா சர்க்கார் அவர்கள் மரங்கள் எவ்வாறு நட்சத்திரங்களுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன



என்பதையும், 27 நட்சத்திரங்களுக்குரிய வெவ்வேறு மரங்கள் பற்றியும் விளக்கினார். சிறப்புப் பேச்சாளராக கலந்துகொண்ட காந்திகிராம பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை இணைப் பேராசிரியர் முனைவர் ஒ. முத்தையா அவர்கள் தாகூரும் காந்திகிராமமும், தாகூரும் குழந்தைகளும் மற்றும் தாகூரும் இயற்கையும் பற்றியும் உரை நிகழ்த்தினார். காந்திகிராம அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திரு. எம். ஆர். ராஜகோபாலன் அவர்கள் காந்திகிராம வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார். இவ்விழாவில் பள்ளி மாணவர்கள் மற்றும் காந்திகிராமப் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

## குழந்தை வளர்ப்பில் அகிம்சை : ஒரு நல்ல தீர்வா?

**அருண் காந்தி** (மகாத்மா காந்தியின் பேரன்)

இந்தக் கதை உண்மையோ, இல்லையோ ஆனால், இதிலுள்ள செய்தி முக்கியத்துவம் வாய்ந்தது. எம்.கே. காந்தி அஹிம்சை நிறுவனத்தை நிறுவியவரும் மகாத்மா காந்தியின் பேரனுமான டாக்டர் அருண் காந்தி, ப்யூர்டோ ரிகோ பல்கலைக்கழகத்தில் ஆற்றிய ஒரு சொற்பொழிவில் "குழந்தை வளர்ப்பில் அஹிம்சை" என்கிற பின்வரும் கதையைப் பகிர்ந்துகொண்டார்.

தென் ஆப்பிரிக்காவில் உள்ள டர்பன் நகரிலிருந்து 18 மைல்களுக்கு அப்பால் எனது தாத்தா அமைத்த நிறுவனத்தில் எனது பெற்றோருடன் வசித்து வந்தேன். அப்போது எனக்கு 16 வயது இருக்கும். நாங்கள் நகரத்தை விட்டு மிகத்தள்ளியிருந்த காரணத்தால் எங்களுக்கு அக்கம் பக்கத்தில் வசிப்போர் யாருமில்லை. ஆகையால் நானும் எனது இரு சகோதரிகளும் நகரத்திற்குப் போகும் சந்தர்ப்பத்தை மிகவும் எதிர்நோக்கிக் காத்திருப்போம். ஏனென்றால் அப்போதுதான் நாங்கள் எங்களின் நண்பர்களின் வீட்டிற்கோ அல்லது திரைப்படத்திற்கோ போகமுடியும்.

ஒருநாள், எனது தந்தையார் ஒரு பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக என்னை நகரத்திற்கு கார் ஓட்டி வருமாறு அழைத்தபோது, நான் அதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டேன். நான் நாள் முழுவதும் நகரத்தில் இருக்கவேண்டியிருந்ததால் எனது தாயார் தனக்கு வேண்டிய மளிகைச் சாமான்கள் பட்டியலையும், எனது தகப்பனார் நகரத்தில் முடிக்கவேண்டிய சிறு சிறு வேலைகளையும் அளித்தனர். அதில் ஒன்று கார் பழுது பார்ப்பது. எனது தந்தையை காலையில் கூட்டத்திற்கு இறக்கிவிடும்போது 'மாலை 5 மணிக்கு உன்னை இங்கே சந்திக்கிறேன். இருவரும் சேர்ந்தே வீட்டிற்குப் போவோம்' என்றார்.

எனக்களிக்கப்பட்ட அனைத்து வேலைகளையும் முடித்தபின் நான் அருகிலிருந்த ஒரு திரை அரங்கத்திற்குச் சென்றேன். ஜான்வெய்ன் இரட்டை வேடத்தில் நடித்த அந்தத் திரைப்படத்தை நான் மெய்மறந்து பார்த்துக்கொண்டிருந்தேன். எனக்கு ஞாபகம் வந்தபோது பார்த்தால் மணி 5.30. நான் வேகமாக கார் பழுது பார்க்கும் இடத்திற்குச் சென்று காரை எடுத்துக்கொண்டு எனது தந்தை நிற்கச் சொன்ன இடத்திற்கு விரைந்தேன். நான் அங்கு சென்றபோது மணி 6.00. அவர் 'ஏன் தாமதமாக வந்தாய்?' என்று என்னைக் கேட்டார். அவர் ஏற்கனவே கார் பழுதுபார்க்கும் இடத்திற்குப் போன் செய்திருந்ததை அறியாத நான், 'ஜான்வெய்ன் நடித்த படத்தைப் பார்த்தேன் அதனால்தான்' என்று சொல்ல வெட்கப்பட்டுக்கொண்டு 'கார் சரிசெய்யக் காத்திருக்கவேண்டியிருந்தது' என்று சொன்னேன்.

நான் பொய்சொன்னதைக் கண்டுபிடித்த அவர் 'உண்மையைத் தைரியத்துடன் கூற முடியாமல் வளர்த்திருக்கும் எனது வளர்ப்பு முறை மீதுதான் ஏதோ தவறு இருக்கிறது. அந்தத் தவறு எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிப்பதற்காக நான் 18 மைல்கள் யோசனை செய்துகொண்டு நடந்தே வீட்டிற்குப் போகப் போகிறேன்,' என்று சொல்லிவிட்டு இருட்டாக இருந்த அந்த சாலையில் நடக்க ஆரம்பித்தார். அவரை விட்டுப் போகமுடியாமல் ஐந்தரை மணி நேரம் அவர் பின்னாலேயே காரை ஓட்டிக்கொண்டு நான் சொன்ன சிறு பொய்க்காக எனது தந்தை அடைந்த மனவேதனையைப் பார்த்துக்கொண்டே சென்றேன். இனி ஒருபோதும் பொய் சொல்லப் போவதில்லை என்று, அன்று, அப்போதே முடிவுசெய்தேன்.

இந்நிகழ்ச்சியை அடிக்கடி நினைத்துப் பார்த்து நான் வியப்பதுண்டு. இப்போது நாம் நம் குழந்தைகளைத் தண்டிக்கும் வழியில் அவர் என்னைத் தண்டித்திருந்தால் நான் இந்தப் பாடத்தைக் கற்றிருப்பேனா? முடியாது என்றே நினைக்கிறேன். அந்தத் தண்டனையை வாங்கும்போது வலித்திருக்கும், ஆனால் மறுமுறை அதே தவறைச் செய்திருப்பேன். வன்முறையற்ற அவரது இந்த ஒரு செயலின் மாபெரும் சக்தியானது இன்னும் என்னுள் நிலைகொண்டு என்னை வழிநடத்துகிறது. இதுவே அஹிம்சையின் சக்தி ஆகும்.

*தமிழாக்கம்:* முனைவர் இரா. உமா

இருள் என்பது விடியும் வரை
இதயம் என்பது துடிக்கும் வரை
நட்பு என்பது சாகும் வரை

## ஒருங்கிணைந்த விற்பனை அங்காடி

காந்திகிராமம் பிரதான சாலையில் கதர் அறக்கட்டளையின் மூலம் புதிதாகக் கட்டப்பட்ட ஒருங்கிணைந்த விற்பனை அங்காடி 07-06-2012 அன்று கதர் கிராமக் கைத்தொழில்கள் ஆணையத்தின் தென் மண்டல மண்டல உறுப்பினர் திரு. K.C. காளப்பாஜி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சகோதர நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் கதர் கிராமக் கைத்தொழில் ஆணையத்தின், மதுரை மண்டல அலுவலக அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



திரு. K.C. காளப்பாஜி அவர்கள் தமது உரையில் கதர் உற்பத்தியில் புதிய முறைகளைக் கையாளுதல் மற்றும் புதிய டிசைன்களைப் புகுத்துதல் அவசியம் என்றார். மேலும், மற்ற நிறுவனங்களை விட அதிக அளவில் கதரை விற்பனை செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். அத்தோடு புதிய புதிய டிசைன்களை அறிமுகப்படுத்தி வருவது இளம் தலைமுறையினரை ஈர்க்கக் கூடியதாக உள்ளது என்றும் பாராட்டினார்.

காந்திகிராம அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் திரு. எம்.ஆர். ராஜகோபாலன் அவர்கள், கதர் உற்பத்தியில் கிராம இளைஞர்களை அதிகமாக ஈடுபடுத்த வேண்டும் என வலியுறுத்தினார். காந்திகிராம அறக்கட்டளைச் செயலாளர் திரு. K. சிவக்குமார் அவர்கள் இன்னும் பெருமளவில் புதிய டிசைன்களைப் புகுத்தி விதவிதமான கதர் ஆடைகளை உற்பத்தி செய்து அவற்றை அதிக அளவில் விற்பனை செய்யும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது என்றும் கதர் ஆடைகளில் இயற்கை சாயங்களைப் பயன்படுத்தி தயார் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

## சௌபாக்கிய இல்லக் குழந்தைகள்

சௌபாக்கிய இல்லக் குழந்தைகள் இல்லத்தில் கோதாவரி சுப்பிரமணியன் நினைவு கட்டிடம் ரூ. 8.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இதில் 40 பெண் குழந்தைகள் தங்கி உள்ளனர். அக்கட்டிடம் குழந்தைகள் நன்கு படிக்கும் வசதி கொண்டதாக உள்ளது. திருமதி மிருதுளா ரமேஷ் அவர்கள் இல்லத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கைக்கடிகாரம் வழங்கியுள்ளார்கள். அதுமட்டுமல்லாது நன்கொடையாளர்கள் அளித்த தொகையில் இல்லக் குழந்தைகளின் இணைய வழிக் கல்விக்காக LCD ஒன்று வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள உலக வங்கி நிறுவனத்தில் பணிபுரியும் அலுவலர்கள் இவ்



இல்லக் குழந்தைகளுக்குத் தேவையான கணித கருவிப் பெட்டிகள் மற்றும் பேனா, பென்சில் ஆகியவற்றை அளித்துள்ளனர்.

அமெரிக்காவிலுள்ள ஆன் ஃபவுண்டேஷன் மூலம் இணைய தளம் வாயிலாக ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி 51 குழந்தைகள் பெற்று வருகின்றனர்.

குழந்தைகளின் தனித்திறன்களை வளர்ப்பதற்காக தையல் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், 30 குழந்தைகள் பரதநாட்டியமும், 20 குழந்தைகள் கர்நாடக இசையினையும் கற்றுவருகின்றனர். ஐந்து வருடப் பரதநாட்டியப் பயிற்சி முடித்த குழந்தைகளில் குறைந்தது ஐந்து பேரையாவது அரங்கேற்றம் செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

கஸ்தூர்பா மருத்துவமனையில் பணிபுரிந்துவரும் டாக்டர் S. அறம் மற்றும் டாக்டர் கீதா அறம் ஆகிய இருவரும் குழந்தைகளின் நலனில் அக்கறை கொண்டு சிறப்பு மருத்துவ முகாம் ஒன்றை நடத்தினர். அதில் குறைபாடு உள்ள குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு நோய்கள் வராமல் இருப்பதற்கான வழிமுறைகளை எடுத்துரைத்தனர்.

## கஸ்தூரிபா சேவிகாசிரமம்

கஸ்தூரிபா சேவிகாசிரமம் சிறப்பு மேனிலைப் பள்ளியில் இவ்வாண்டு 120 மாணவிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். தற்போது இப்பள்ளியில் 263 மாணவிகள் தங்கிப் படிக்கின்றனர். 2011–12–ஆம் ஆண்டு நடைபெற்ற 12–ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் 34 மாணவிகள் தேர்வு எழுதினர். அதில் 100 சதவீத தேர்ச்சி பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். அதேபோல் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 83 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளனர். செல்வி P. வைத்தீஸ்வரி என்ற மாணவி 12–ஆம் வகுப்பில் 1067 மதிப்பெண்கள் பெற்று பள்ளி முதலிடம் பெற்றுள்ளார். செல்வி P. புஷ்பலெட்சுமி 403 மதிப்பெண்கள் பெற்று 10–ஆம் வகுப்பில் முதலிடம் பெற்றுள்ளார். 16–07–2012 முதல் 21–07–2012 முடிய 10, 11, 12 ஆம் வகுப்பு மாணவிகளுக்கு வாழும் கலைப்பயிற்சி மையத்திலிருந்து திருமதி கிருஷ்ணவேணி அவர்களால் யோகா சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக்குரிய முழுக்கட்டணத்தையும் திரு. சரவணன் அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

திண்டுக்கல் ரோட்டரி சங்கத்தின் மூலம் இரண்டு கணிப்பொறிகள் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் இப்பள்ளிக்கு வழங்கப்பட்டுள்ளன.

## சாந்திப் பள்ளி

2012–13–ஆம் கல்வியாண்டில் 72 மாணவர்களும் 32 மாணவிகளும் ஆக மொத்தம் 104 பேர் சாந்திப் பள்ளியில் கல்வி கற்று வருகின்றனர். திருநெல்வேலி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மூலம் இளம் விஞ்ஞானிகளுக்கான பயிற்சி முகாம் இப்பள்ளியில் நடைபெற்றது. இப்பயிற்சியின் மூலம் இப்பள்ளிக்கு ரூ. 62,000/– நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது.





தூத்துக்குடி ஸ்டெர்லைட் நிறுவனம் மூலம் 70 பள்ளிக் குழந்தைகளுக்கு Hearing Aid வழங்கப்பட்டது. மேலும் பெங்களூரு R.V. பல் மருத்துவக் கல்லூரி மூலம் 20 பேர் கொண்ட மருத்துவக்குழு சாந்திப் பள்ளியில் முகாம் நடத்தியது. அம்முகாமில் குழந்தைகளுக்குப் பல் சம்பந்தப்பட்ட அனைத்துப் பரிசோதனைகளும் நடத்தப்பட்டன.

## காந்திகிராம தொடக்கப் பள்ளி

பள்ளி மாணவர்கள் விளையாடுவதற்காக விளையாட்டுப் பூங்கா ஒன்று (ஊஞ்சல், சருக்கு, ராட்டினம்) அமைக்கப்பட்டுள்ளது. பெங்களூருவில் உள்ள



திரு.ரவிநாராயணன் அவர்கள் இப்பூங்காவினை அமைக்க நிதி உதவி அளித்துள்ளார். மேலும் திண்டுக்கல் ரோட்டரி கிளப் மற்றும் குயின் சிட்டி மூலம் இப்பள்ளிக்கு இரண்டு கணினிகள் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## அரசின் புதுவாழ்வுத் திட்டம்

நிலக்கோட்டை ஒன்றியத்தில் புதுவாழ்வுத் திட்டத்துடன் இணைந்து மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக காந்திகிராம அறக்கட்டளையின் விரிவாக்கப்பகுதியின் மூலம் பணிகள் மேற்கொள்ள கடந்த மே மாதம் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதனடிப்படையில் மாற்றுத் திறனாளிகளைக் கண்டறியும் புள்ளிவிபரச் சேகரிப்பும்,



கிராம ஊராட்சி குறித்த அடிப்படைத் தகவல் சேகரிப்பும் நடைபெற்று வருகிறது. மாற்றுத்திறனாளிகள் யார்? அவர்களை எப்படிக் கண்டறிவது என்பது குறித்த விழிப்புணர்வு படக்காட்சிகள் 23 கிராம ஊராட்சிகளில் நடத்தப்பட்டன. மாற்றுத்திறனாளிகளை ஒருங்கிணைத்து ஆறு சுய உதவிக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இவர்களுக்கான உபகரணங்களை தமிழக அரசின் மூலம் பெறுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

## நிறுவன வளர்ச்சி பற்றிய அடிப்படைப் பயிற்சி

இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் திருமிகு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் காந்திகிராம அறக்கட்டளையின் புரவலராகத் திகழ்ந்ததுடன் நிறுவன வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்து வந்துள்ளார். R.V. பவுண்டேசன் மூலம் கிராமப்புறங்களில் செயல்பட்டு வரும் சமுதாயம் சார்ந்த அமைப்புகள் நிறுவனமாக உயர்வதுடன் வலுப்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் காந்திகிராம சுயஉதவிக்குழுக்



கூட்டமைப்புகளின் வளர்ச்சிக்காக அதன் பொறுப்பாளர்களுக்கு ஜுன் 4 – 6 தேதிகளிலும் மற்றும் ஜுலை மாதம் 19–21 ஆகிய தேதிகளிலும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடைபெற்றன. இப்பயிற்சியில் 19 கூட்டமைப்புகளைச் சேர்ந்த 47 பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இப்பயிற்சியில், நிறுவன நிர்வாகம், நிதி நிர்வாகம், முரண்பாடுகள் மேலாண்மை, தலைமைத்துவம், தகவல் தொடர்பு, தணிக்கை, பதிவு செய்தல், எழுதுதல், நிலைத்த தன்மை பெறுதல், ஆண்டு செயல் திட்டம் போன்ற தலைப்புகளில் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு வகுப்புகள் நடத்தப்பட்டன. காந்திகிராம கிராமிய நலம் மற்றும் குடும்பநல அறக்கட்டளை, காந்திகிராம கிராமியப் பல்கலைக் கழகம் ஆகிய அமைப்புகளின் பயிற்றுனர்கள் மற்றும் பேராசிரியர்கள் பயிற்சி அளித்தனர். இதில் நபார்டு வங்கியின் மாவட்ட பொது மேலாளரும் கலந்துகொண்டார்.

## இயற்கை சாயம்

டாக்டர் சௌந்தரம் அறக்கட்டளையின் மூலம் இயற்கை சாயம் தயாரித்தல் மற்றும் பயிற்சி பிரிவு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவில் TVS நிறுவனமான சுந்தரம் பைனான்சைச் சேர்ந்த திருமதி கீதாராம் அவர்கள் மூலம் சிட்டங்களைச் சலவை செய்வதற்கும் மற்றும் உலர்த்துவதற்கும் தேவையான இயந்திரங்கள் நிறுவப்பட்டு தற்போது இப்பிரிவில் இயங்கிவருகின்றன. மேலும், இதிலிருந்து வரும் கழிவு நீரினைச் சுத்திகரிப்புச் செய்வதற்கான வழிவகையும் செய்யப்பட்டு அது நன்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.



பெங்களூரில் உள்ள அசோகா ஆராய்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் செயல்பாடு என்ற அமைப்பு சிக்கிம் மாநிலத்திலும் செயல்பட்டு வருகிறது. அங்குள்ள சில தாவரங்கள் அவர்களுடைய வேளாண்மைக்கு உபயோகமற்றதாக உள்ளன. அதனை மதிப்புக் கூட்டும் பொருட்டு அந்தத் தாவரங்களிலிருந்து இயற்கைச் சாயம் பிரித்தெடுத்து அதனைப் பயன்படுத்தி உல்லன் துணியில் சாயமேற்றிப் பயன்படுத்தும் பொருட்டு சிக்கிமிலிருந்து அல்போன்சா லேப்பா, துளசிராம் கேட்வால், திலிப் குமார்

ராஜ், செல்வி கருணாகூராங் ஆகியோர் ஜுலை 2 முதல் ஆகஸ்ட் 3 வரை ஐந்து நாட்கள் இயற்கைச் சாயப் பிரிவில் பயிற்சி பெற்றுச் சென்றனர். இப்பயிற்சியில் யூப்பிட்டோரியம் தாவரத்திலிருந்து இயற்கைச் சாயம் பிரித்து எடுத்து உல்லன் துணியில் சாயமேற்றும் பயிற்சி கொடுக்கப்பட்டது. மேலும், அவர்கள் இடத்தில் கிடைக்கும் கடுக்காய், மஞ்சிஸ்டம், கருவேல் பட்டை, குல்மோகர் போன்ற தாவரத்திலிருந்து இயற்கைச் சாயம் பிரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## குடிநீர் பயன்பாடு குறித்த ஆராய்ச்சி

குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் மூலம் குடிநீர் பயன்பாடு குறித்த ஆராய்ச்சி காந்திகிராம ஊராட்சி சாமியார்பட்டி கிராமத்தில் பெங்களூரில் உள்ள அர்கெயம் நிதி நிறுவன உதவியுடன் நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக 68 வீடுகளில் குடிநீர் கணக்கீட்டு கருவிகள் (Water Meter) சோதனை



அடிப்படையில் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டது. இதனால் குடிநீர் சேமிப்பு, குடிநீர் வீணாகுதல், மின்சாரக் கட்டணம் மற்றும் பராமரிப்பு செலவு கணிசமாகக் குறைந்துள்ளன எனத் தெரியவந்தது. இதனடிப்படையில் ஊராட்சி மன்றத் தலைவர், உறுப்பினர்கள், பொதுமக்கள் வேண்டுகோளின்படியும் காந்திகிராம அறக்கட்டளை அர்க்கெயம் நிறுவனத்தின் ஒப்புதல்பெற்று சாமியார்பட்டியிலுள்ள 161 வீட்டு இணைப்புகளிலும் தண்ணீர் அளவீட்டுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளது.

30–07–2012 அன்று அர்க்கெயம் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி மாலா சுப்பிரமண்யம், ஆலோசகர் திரு. விஸ்வநாத் மற்றும் திட்ட மேலாளர் திரு. மனோகர் ஆகியோர் “குடிநீர் பயன்பாடு குறித்த ஆராய்ச்சி மாதிரிக் கிராமத்தை” திறந்து வைத்தனர். மேலும் அவர்கள் அக்கிராமத்தில் உள்ள பள்ளிக் குழந்தைகள் சுயஉதவிக்குழுப் பெண்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குநர்கள் ஆகியோருடன் திட்டப் பயன்பாடு குறித்து கலந்துரையாடினர். சுகாதாரத்தை மேம்படுத்த அனைத்து வீடுகளிலும் கழிப்பறை கட்டிப் பயன்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

## மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத்திட்டம்

திருநெல்வேலி மாவட்டம் கடயம் ஒன்றியத்தில் காந்திகிராம அறக்கட்டளையின் மூலம் சமூகம் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் நடைபெற்று வருகிறது. நெதர்லாந்து TdH-NL திட்ட அலுவலர் திரு. P. தங்கப்பெருமாள் அவர்கள் 04–05–2012 மற்றும் 05–05–2012 ஆகிய இரு தினங்களாக திட்டப் பணிகளைப் பார்வையிட்டார். அப்பொழுது திட்ட நிலைத்துவம் பெறுவதற்கான வரைவுத் திட்டம் தயார் செய்தல் குறித்தும், திட்டப் பணிகள் பற்றியும் கலந்துரையாடினார். தற்போது TdH-NL குறிப்பிட்ட கிராமப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்க உள்ளதால் இப்பகுதியில் குழந்தைகள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளைக் கண்டறிந்து, குறிப்பாக எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், தெருக் குழந்தைகள் மற்றும் நூற்பாலைகளில் வேலை செய்யும் குழந்தைகள் பற்றிய கணக்கெடுத்து அதனடிப்படையில் புதிய திட்டம் தயாரித்து அனுப்பும்படி பரிந்துரை செய்தார்.

## தரமான கல்வித் திட்டம்

திருநெல்வேலி மாவட்டம் களக்காடு ஒன்றியத்தில் நடைபெற்று வரும் பள்ளிக் குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கில் நன்கொடையாளர் திரு. R. ராஜராகவன் அவர்கள் 20–07–2012 அன்று நடைபெற்ற பள்ளித் தலைமையாசிரியர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டார். தரமான கல்வி முன்னேற்றத்தில் ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது என்றார். மேலும், சுமார் 500 புதிய அகராதிகளைத் தலைமை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திட்ட அலுவலர் திரு. A.L. ரங்கராஜன், காந்திகிராம அறக்கட்டளையின் மனிதவள




மேம்பாட்டுத்துறை இயக்குநர் K. வாசுகி மற்றும் திரு. தட்சிணாமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

## வாழ்வியல் திறன்கள் கல்வி

காந்திகிராம அறக்கட்டளைப் பள்ளிகளில் பணிலும் மாணவ மாணவியர்களிடையே வாழ்வியல் திறன்களைக் கற்றுத்தருவதற்காக வாழ்வியல் திறன்கள் கல்வி என்ற பயிற்சி கையேட்டினை தயார் செய்யப்பட்டுள்ளது. இக்கையேடு 8, 9, 10 –ஆம் வகுப்பு மாணவர்களுக்கு உதவும் வகையில் தயாரிக்கப்பட்டு காந்திகிராம அறக்கட்டளையின் ஆலோசகர் டாக்டர் V.தட்சிணாமூர்த்தி அவர்களால் அறக்கட்டளையின் அனைத்துக் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி அளித்தார்.



இப்பயிற்சியில் குழு விவாதம், விளக்கக்காட்சி மற்றும் விளையாட்டுக்கள் இடம்பெற்றன. இப்பயிற்சியில் சுய விழிப்புணர்வு, மற்றவர் உள்ளத்தில் உள்ள உணர்வுகளை அறிதல், ஆராய்கின்ற சிந்தனை, ஆக்குமைத் திறன், பிரச்சினைகளுக்குத் தீர்வு, முடிவு எடுத்தல், தகவல் தொடர்பு, ஒருவருக்கொருவர் இடையே உள்ள உறவு, மன அழுத்தம் போன்றவைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

## சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் இஞ்சி

இந்திய சமையலறைகளில் அதிகம் பயன்படுத்தப்படும் இஞ்சிக்கு சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் சக்தி உள்ளது என்று ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

ரத்தத்தில் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும் பொருள் இஞ்சியில் இயற்கையிலேயே உள்ளதால், சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகள் இஞ்சியை உணவில் சேர்த்துக் கொள்ளலாம் என்று அறிவுறுத்தியுள்ளனர்.



சிட்னி பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இது குறித்து மேற்கொண்ட ஆய்வில், ரத்தத்தில் அதிக குளுக்கோஸ் அளவைக் கட்டுப்படுத்தும் திறன் இஞ்சிக்கு உள்ளதைக் கண்டுபிடித்துள்ளனர். ரத்த சர்க்கரை அளவு தொடர்ந்து கட்டுப்பாட்டில் இல்லாமல் இருந்தால், இதய பாதிப்பு – சிறுநீரக பாதிப்பு உள்ளிட்ட பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே, சர்க்கரை அளவு அதிகரிக்காமல் இருக்க இஞ்சி உதவுவதுடன், பக்க விளைவுகளைத் தவிர்க்கவும் உதவுகிறது. சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும் திறன் இஞ்சிக்கு உள்ள இந்த ஆராய்ச்சி முடிவு பிளான்ட்டா மெடிகா மருத்துவ சஞ்சிகையிலும் வெளியிடப்பட்டுள்ளது.

நண்பனுக்கு நல்லது செய்
நட்பு நிலைக்கட்டும்
எதிரிக்கும் நல்லது செய்
அவனும் நண்பனாகட்டும்

## அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் (DST Core support)

இந்திய அரசு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அமைச்சகத்தின் நிதி உதவியுடன் (DST Core support) திட்டம் காந்திகிராமத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்றுள்ளது.

☯ அரை ஏக்கர் நிலப்பரப்பில் அவுரிப் பயிர் பயிரிடப்பட்டு அதன் மூலம் இயற்கைச் சாயம் தயாரிக்கப்பட்டு கதர் ஆடைகளில் வண்ணம் ஏற்றப்படுகிறது.



☯ எண்ணெய் ஆட்டுவதற்கு பெரிய இயந்திரங்களையேப் பயன்படுத்தி வரும் நிலையில் விவசாயிகள் சிறிய அளவில் எண்ணை ஆட்டுவதற்கு சிறிய அளவு எண்ணெய் ஆட்டும் இயந்திரத்தை வடிமைப்பதில் இத்திட்டத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

☯ அரியவகை மூலிகைச் செடிகளைப் பாதுகாக்கும் பொருட்டும் அவற்றை மருத்துவத்திற்குப் பயன்படுத்தும் வகையில் மாதிரித் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

☯ கதர்த் துணிகளின் தரத்தை மேம்படுத்தவும் புதிய வடிவமைப்புக்களைப் புகுத்தவும் நேபாளத் தறிகளின் வடிவமைப்புக்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

☯ சானிட்டரி நாப்கின் தயாரிக்கும் இயந்திரத்தில் பெண்களின் வேலைப் பளுவை குறைக்கும் வண்ணம் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதனால் இயந்திரத்தை இயக்குவது பெண்களுக்கு எளிதாக உள்ளது. குழந்தைகளுக்கான பேபி டயப்பர் உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சியும் நடைபெற்று வருகின்றது.

---



*அஹிம்சையின் சக்தியை பெண்கள்*
*உணர்ந்துவிடுவார்களேயானால்*
*பலவீனமான பெண் வர்க்கம் என்பது*
*தானாகவே மறைந்துவிடும்*

– மகாத்மா காந்தி


(For Private Circulation Only)

Editorial Team : **Smt. N. Ramuthai, Smt. R. Revathi, Smt. Meenakshi**



Gandhigram Trust, Gandhigram - 624 302

**Phone** : 0451 - 2452326 & 2452400  **Fax** : 0451 - 2453347

**e_mail** : ggmtrust@sify.com  **www.** gandhigram.org





*Printed at :* **Dr. Soundram Trust, Gandhigram Press,** Gandhigram - 624 302, Telefax : 0451 - 2453347